O.S.148/2019
PW1 – உமையவேல்
நாள் 28.07.2025, 12.15 P.M.

**1 மற்றும் 3 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். பிராதில் உள்ள சங்கதிகள் யாருடைய தகவலின் பேரில் தயார் செய்தேன் என்றால் எனது அப்பா சொல்லி தெரியும். எனது அப்பா இந்த வழக்கில் தரப்பினராக இல்லை என்றால் சரிதான். எனது அப்பா இந்த வழக்கு சொத்தை கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கின் 2 வது பிரதிவாதி எனது தம்பியின் மனைவி என்றால் சரிதான். 2 வது பிரதிவாதி எங்கு வசித்து வருகிறார் என்றால் பஞ்சாப்பில் வசித்து வருகிறார். எனது தம்பி பஞ்சாப்பில எத்தனை வருடங்களாக வேலை செய்து வருகிறார் என்றால் இரண்டு வருடமாக வேலை செய்து வருகிறார்.

2. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது தம்பியும் எனது தம்பியின் மனைவியும் எங்கு இருந்தார்கள் என்றால் அசாமில் இருந்தார்கள். எனது தம்பி இராணுவத்தில் பணி புரிவதால் எனது தம்பியின் மனைவியும் வேலை நிமித்தமாக பல்வேறு மாநிலங்களில் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது தம்பிக்கும் 2 வது பிரதிவாதிக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால் சரியாக ஞாபகமில்லை. வழக்கு கிரைய சொத்து பூர்வீக சொத்து என்று கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் ஜக்கம்மாள் பெயரில் உள்ளது. நான் கிரையம் பெறும் போது ஜக்கம்மாளின் இறப்பு சான்றிதலோ வாரிசு சான்றிதலோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

3. எனக்கு தாவா சொத்தை கிரையம் கொடுத்த சந்திரசேகர் அம்மாவின் பெயர் ஜக்கம்மாள். அவரின்இறப்பு சான்றிதலோ வாரிசு சான்றிதலோ பத்திர பதிவின் போது கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கு சொத்தை கிரையம் பெறுவதற்கு முன் 3 ம் பிரதிவாதியான கோவிந்தபெருமாளிடம் வழக்கு சொத்தை கிரையம் கொடுக்குமாறு கேட்டேன் என்றால் சரியல்ல. நான் பொய்யாக கூறிகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தானது 3 ம் பிரதிவாதியின் அனுபவத்தில் இருந்ததால்

கிரையம் கேட்டேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற பின்னர் 3ம் பிரதிவாதி கடந்த 19.07.2017ம் தேதி மாவட்ட ஆட்சியரிடம் கிரைய சொத்து சம்பந்தமாக என்மீதும் 2ம் பிரதிவாதி மீதும் மனு கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த புகார் மனுவின் மீது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் விசாரணை நடத்தினார் என்றால் நான்தான் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்திருந்தேன் அது சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

4. நான் புகார் கொடுத்தது சம்பந்தமான ஆவணங்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் மீது மாவட்ட பதிவாளரிடம் தாவா சொத்து சம்பந்தமாக புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த விசாரணையில் மாவட்ட பதிவாளர் எனக்கு கிரையம் கொடுத்த சந்திரசேகர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் துறைக்கு பரிந்துரை செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய சந்திரசேகர் என்பவர் ஜக்கம்மாளின் உண்மையான வாரிசு இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தானது ஜக்கம்மாள் என்பவர் 1943ல் கோவிந்த ரெட்டியார் மகன் ஆறுமுக ரெட்டியார் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற சொத்து என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. அதன் பின்பு ஜக்கம்மாளிடம் இருந்து 1 மற்றும் 3 பிரதிவாதிகளின் அம்மாவை பெற்ற தகப்பனார் கோவிந்தரெட்டியார் என்பவரிடம் 19.07.1957ம் வருடம் கிரையம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. நான் தாவா சொத்தை வாங்கிய போது வில்லங்க சான்றை சரிபார்த்த போது மேற்படி நபர்களின் பெயர்கள் வரவில்லை. நான் எத்தனை வருடங்களுக்கு வில்லங்க சான்றை பார்த்தேன் என்றால் 34 ஆண்டுகளுக்கு பார்த்தேன். ஜக்கம்மாளுக்கு வழக்கு சொத்தானது பூர்வீக சொத்து என்பதை காண்பிப்பதற்கு அ பதிவேடோ SLR பதிவு ஆவணங்களையோ இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சொத்தானது 1மற்றும் 3ம் பிரதிவாதிகளின் தாத்தா கோவிந்தரெட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றும் அவரும் அவரது மனைவி வீரலட்சுமி இறந்த பின்னர் அவரது ஒரே வாரிசான 1 மற்றும் 3 ம் பிரதிவாதிகளின் தாயாரான சாரதா அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல.

6. கோவிந்தரெட்டியார் கிரையம் வாங்கிய பின் பட்டா மாறுதல் செய்யாமல் இருந்த காரணத்தை வைத்து போலியான சந்திரசேகர் என்பவரை வைத்து எனது பெயரிலும் 2ம் பிரதிவாதி பெயரிலும் சொத்தை மாற்றம் செய்துள்ளேன் என்றால்

சரியல்ல. மாவட்ட பதிவாளர் நடத்திய விசாரணையில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. ஜக்கம்மாளின் உண்மையான வாரிசு சந்திரசேகர் இல்லை என்றாலும் அதனால்தான் நான் ஆவணங்களை தாக்கல்செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி